முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

45—

துணை மின் நிலையம்

***33094—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள கந்தர்வக்கோட்டையில் 5 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி எப்போது துவங்கும்?

(ஆ) விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 24–1–2003 அன்று இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து செயலாற்றுகின்ற ஓர் அரசு என்பதற்கு உதாரணமாக—இங்கே எதிர்க் கட்சிகள் இல்லை. எனவே அவர்கள் காதிலே கேட்கின்ற வகையிலே சத்தமாகவும், ஓங்கியும் பலத்த குரலிலே, நான் அவர்கள் காதிலே விழும்படி கேட்கின்றேன்—ஓராண்டு காலத்திலேயே இந்தக் கோரிக்கை இங்கே வைத்தவுடனேயே செயலாற்றி அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிய ஓர் அரசுதான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இந்த உதாரணத்தை வைத்துப் பார்க்கும்போது எல்லாத் துறைகளும் இன்றைக்கு எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயலாற்றுகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் என்பதை நான் இங்கே தெரிவித்து திருத்தப்பட்ட விடையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2004 ஜூலை 28]

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியின்கண் கந்தர்வக்கோட்டையில் புதியதாக ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு விட்டது. இத்திட்டத்தை 2003–2004 ஆம் ஆண்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற வாக்கிற்கு இணங்க கேட்காமலே பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு மின் துறையிலே சட்டமன்றத்திலே இந்தக் கோரிக்கை வைத்தற்குப் பின்னாலே, ஓராண்டுக்குள்ளாகவே, மிக விரைவிலே, முடித்துக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சகத்திற்கும் தொகுதி மக்களுடைய சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஒரு கூடுதல் பலனாக இன்னொரு கோரிக்கையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன். இதிலே இந்தக் கோரிக்கையை வைத்ததற்குப் பின்னாலே, ஆதனக்கோட்டையிலே 66 கிலோ வாட் துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக உயர்த்த வேண்டுமென்று கூடுதலாகக் கோரிக்கை வைத்து இருக்கின்றோம். அந்தக் கோரிக்கையையும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதே ஓராண்டுக்குள்ளாக இந்தப் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு ஏறத்தாழ 1 கோடி, 2 கோடி அல்ல, 8 கோடி ரூபாய் செலவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக அதற்கும் இந்தத் தருணத்திலே நன்றிகள் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இதிலே குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இன்றைக்கு இந்த ஆதனக்கோட்டை S.S. திட்டத்தின் மூலம் பயன்பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய விவசாயிகளுக்கு பகலிலே 6 மணி நேர மின்சாரமும், இரவிலே 8 மணி நேரம் மின்சாரமும் என்று மொத்தம் 14 மணி நேரம் மின்சாரம் மட்டுமே அந்த விவசாய பம்ப் மோட்டார்களுக்கு மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், பக்கத்து ஊரான ஆலங்குடியிலே, ஆலங்குடி S.S. திட்டத்தின் மூலமாக supply பெறுகின்ற அந்த

[2004 ஜூலை 28

விவசாயிகளுக்கு ஏறத்தாழ பகலிலே 10 மணி நேரம், இரவிலே 10 மணி நேரம் என 20 மணி நேரம் மின்சாரம், கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே கருணை கூர்ந்து தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே—இந்த ஆதனக்கோட்டை S.S. திட்டத்தின் மூலமாக பயன்பெறுகின்ற ஏறத்தாழ நிறைய பஞ்சாயத்துகள் இருக்கின்றன—கந்தர்வக்கோட்டை மட்டுமல்லாமல் ஆதனக்கோட்டை, சோத்துப்பாளை, வளவம்பட்டி, வாராப்பூர், வடவாளம், மணவிடுதி, பெருங்களூர், அண்டகுளம், முள்ளாகோயில், முள்ளூர் எனப் பல்வேறு பஞ்சாயத்துகளுக்கு இந்த S.S. திட்டத்தின் மூலமாக 20 மணி நேரம் மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Uninterrupted quality power supply – தடையில்லா மின் வசதியைப் பெற வேண்டும் – என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு. எனவே, இந்த ஒரு சீரான மின் விநியோகம் செய்ய வேண்டுமென்றால் Grid frequency 49.7 hertz என்பதை maintain செய்தாக வேண்டும். அந்த Grid frequency–யிலே குறைந்தாலும், அதிகமானாலும் சரி அந்த Grid collapse ஆகும் ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவேதான், நாம் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த வெய்யில் காலத்தில்—கோடை காலத்தில்—7,251 மெகாவாட் பெற்று ஒரு பெரிய சாதனையைப் படைத்திருக்கின்றோம்.

எனவே, இன்னும் 5 per cent கூடுதலாக வருகின்ற ஆண்டில் நாம் எதிர்நோக்கும்போது, கிட்டத்தட்ட 7,262 மெகாவாட் நாம் எதிர்நோக்கி இருப்பது. எனவே, இருக்கின்ற system என்பதில் ஏதாவது மாற்றம் செய்தாலும்கூட கூடுதலான மின்சாரம் நமக்குத் தேவை. எனவே இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்றது, —ஆனால் 20 மணி நேரம், 24 மணி நேரம் மின்சாரம் தர வேண்டுமென்பதுதான் அம்மாவின் அரசினுடைய கொள்கை. எனவே—இந்த ஒரு சூழ்நிலையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும். Capacity அதிகமாகின்றபட்சத்தில் நிச்சயமாக அவருடைய கோரிக்கை, வரும் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.